

சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்கு வேலி அம்பலம்" அவர்களின் பிறந்த நாள் அரசு விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் நேற்று (10.06.2025) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு, அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் , சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மற்றும் வாரிசுதாரர்கள் உட்பட பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை மேற்கு தொகுதி திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியம் கோவில்பாப்பாகுடி ஊராட்சி சிக்கந்தர்சாவடி பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் கே.தனச்செல்வம், ஜி.பி.ராஜா, ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், ஆசைக்கண்ணன், பரவை மனோகரன், சசிக்குமார், மருது பாண்டியன், வீரராகவன், கார்த்திக் ராஜா, இளங்கோ , வெற்றிச்செல்வன், ஐயப்பன், அன்புச்செல்வன், மருது ராஜா, வன்னி முத்துப்பாண்டி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் மேலூர் கருத்தம்புலியான்பட்டியில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மேலூர் நகராட்சி தலைவர் முகமது யாசின், வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்பாண்டிச் சிங்கம்

# வாளுக்கு வேலி அம்பலம் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பாராட்டு!

**சென்னை, ஜூன் 11-**

**'தென்பாண்டிச் சிங்கம்' வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

விடுதலை வீரர்களைப் போற்றி வணங்கும் அரசாக 'தென்பாண்டிச் சிங்கம்' வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்துக் கொண்டாடி வருவதுடன், இந்த ஆண்டு ஜனவரி மாதம்தான் சிவகங்கை மாவட்டம் நகரம்பட்டியில் அவரது முழுவுருவ வெண்கலச் சிலையினைத் திறந்து வைத்தேன்!

வீரத்தின் விளைநிலமான சிவகங்கைச் சீமையின் மைந்தனாக அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் மானம் காத்த மருதிருவரோடு இணைந்து போரிட்ட வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்தநாளில், அவருக்கு என் வீரவணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கிரிக்கெட் வரலாற்றில் எம்.எஸ். தோனியின் பயணம்

# பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது!

## 'ஹால் ஆப் ஃபேம்' வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 11-**

**கிரிக்கெட் வரலாற்றில் எம்.எஸ். தோனியின் பயணம் பொன்னெழுத்துக்களால் தற்போது பொறிக்கப்பட்டுள்ளது என்று அவர் 'ஹால் ஆப் ஃபேம் வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

ஐ.சி.சி.யின் பெருமைமிகு 'ஹால் ஆஃப் ஃபேம்' வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் தோனி அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஐ.சி.சி.யின் பெருமைமிகு 'ஹால் ஆஃப் ஃபேம்' வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் தோனி அவர்களுக்கு என் வாழ்த்துகள்!



ஒருநாள் போட்டிகளில் அதிக எண்ணிக்கையில் இந்தியாவுக்குத் தலைமை தாங்கியது தொடங்கி, அதிக ஸ்டம்பிங் செய்தவர் என்ற சாதனை படைத்து, அனைத்து ஐ.சி.சி. கோப்பைகளையும் வென்ற ஒரே கேப்டன் என்பது முதல் சென்னை அணியை 5 முறை ஐ.பி.எல். கோப்பையையும், இருமுறை சாம்பியன்ஸ் லீக் தொடரிலும் வெற்றிபெறச் செய்தது வரை நீங்கள் உயர்சிறப்பான கிரிக்கெட் மரபைக் கட்டியெழுப்பியுள்ளீர்கள்.

உங்களின் நிதானத்தால் தலைமைத்துவத்தின் வரையறையையே மாற்றியமைத்தீர்கள்! விக்கெட்கீப்பிங் என்பதை ஒரு கலைநேர்த்தியாக மாற்றிக் காட்டினீர்கள்! ஒரு தலைமுறையையே உங்களது தெளிவாலும் உறுதியாலும் ஊக்குவித்துள்ளீர்கள்.

உங்களது பயணம் கிரிக்கெட் வரலாற்றில் தற்போது பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளது. எப்போதுமே 'Thala For a Reason' என்ற புகழுரை ஓயாது;

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், ஜூன் 11 -

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் இன்று (11.06.2025 - புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில்



மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும்,

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணிச் செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்க, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ண ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :**

1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி 'ஓரணியில் தமிழ்நாடு' - உறுப்பினர் சேர்க்கை குறித்து.

2. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கர்நாடக மாநில கழக இலக்கிய அணி

# வன்னி மு.கோபால் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

பெங்களூரு, ஜூன் 11-

கர்நாடக மாநில தி.மு.க. மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநில கழக இலக்கிய அணி நிர்வாகியும், சிறந்த கவிஞர், எழுத்தாளர், மேடை பேச்சாளருமான வன்னி மு.கோபாால் அவர்கள் (வயது 84) உடல் நலக் குறைவால் நேற்று (10.06.2025-செவ்வாய்) காலை பெங்களூருவில் உள்ள தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு 3 மகள்களும் ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கர்நாடக மாநிலக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (10.06.2025) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

இறுதி ஊர்வலத்திலும் கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம்-12**

ம. அ. 12. ந. க. எண். இ1 / 2107 / 2025

**குறுகிய கால மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

**மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / மண்டலம் - 12 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.**

மண்டலம்-12 - பகுதி-37- வார்டு-165 நங்கநல்லூர் ராம் நகர் 2வது பிரதான சாலை, புதிய நிழற்கூடம் **(Shelter)** அமைக்கும் பணி (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி)

| | |
|---|---|
| பணியின் தோராய மதிப்பு ரூ. **78,24,008.41** | பணியின் முன்வைப்பு தொகை: ரூ.**79,000/-** |

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **20.06.2025** அன்று மாலை **3.00 P.M.** மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **23.06.2025** அன்று மாலை **3.30 P.M.** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 2897 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / ம- 12**




திருச்செந்தூர் நகராட்சி குமாரபுரத்தில் சாலை அமைக்கும் பணியினை மீன் வளம் மீனவர் நலன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தொடங்கி வைத்தார் உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, நகர் மன்றத் தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர் மணல்மேடு சுதாகர், மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.